


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (23.09.2024) இராயபுரம் மண்டலம், வார்டு-58க்குட்பட்ட கண்ணப்பர் திடலில் வீடற்றோருக்கான காப்பகத்தில் வசிக்கும் 114 குடும்பங்களுக்கு மூலக்கொத்தளம் திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், ப.தாயகம் கவி, துணை மேயர் மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நியமனக் குழு உறுப்பினர் சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ஸ்ரீ ராஜேஸ்வரி, பரிதி இளம்சுருதி மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறோம்!

# அரசின் திட்டங்களை சிறப்பாகப் பயன்படுத்துங்கள்!

## சென்னையில் வீட்டுமனை பட்டா வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, செப். 25 -**

**சென்னை, எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட மூர்மார்க்கெட் அருகில் வீடற்றோர் குடியிருப்பில் கடந்த 22 ஆண்டுகளாக வசித்து வந்த 114 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் விழா, கண்ணப்பர் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது: -**

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் 114 குடும்பங்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பாக, வீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஆணைகளை வழங்குகின்ற, இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

### 22 வருடக் கனவு!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு, உங்களின் 22 வருட கனவை, இன்று நிறைவேற்றிக் காட்டி இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை என்பவை அடிப்படைத் தேவைகள். அதிலும், இருக்க இடம் என்பது மிகமிக முக்கியமான ஒரு தேவை. அந்தத் தேவையை நம் கழக அரசு இன்று உங்களுக்கு நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது. அதனால், உங்களுக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியை, உங்கள் ஒவ்வொருவரின் முகத்திலும் உங்களின் சிரிப்பின் மூலம் அதை உணர்கிறேன்.

மூலக்கொத்தளத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டப் பகுதியில், உங்களுக்கான 114 வீடுகள் வழங்கப்பட உள்ளன. உங்களுக்கு எல்லாம் வீடு கிடைக்க வேண்டும் என்று உறுதியோடு பணிகளைச் செய்த மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், அதனை நிறைவேற்றித் தந்த அமைச்சர் அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும், தன்னுடைய தொகுதி மக்களுக்காக ஏறாத படிகள் கிடையாது, தட்டாத கதவுகள் கிடையாது என்று உங்களின் கோரிக்கைகள் எல்லாம் உணர்ந்து உழைத்த சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் அவர்களுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உங்களிடம் வாக்குறுதி!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை சொல்வதை செய்கின்ற இயக்கம். சொல்வதை மட்டுமே செய்கின்ற தலைவர் நம் முதலமைச்சர் அவர்கள். 2021 ஆம் ஆண்டு தேர்தலின் போது கண்ணப்பர் திடலில் உள்ள வீடற்றோர் விடுதி உள்ளிட்ட இடங்களில் வசித்த உங்களுக்கு, `வீடு வழங்கப்படும்' என்று நம் கழகத் தலைவர் அவர்கள் உங்களிடம் வாக்குறுதி கொடுத்து இருந்தார்கள்.

வாக்குறுதி தந்தது மட்டுமல்ல, சென்ற ஆண்டு மழைக் காலத்தின்போது, முதலமைச்சர் அவர்களை அண்ணன் சேகர்பாபு அவர்கள் உங்கள் பகுதிக்கே அழைத்துக் கொண்டு வந்தார்.

அப்போதே நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியை உங்களுக்கு அளித்தார்கள். அதாவது, அடுத்த மழை வருவதற்குள் உங்களுக்கு வீடு வழங்கப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார்கள். சொன்னபடியே, இன்றைக்கு உங்களுக்கு வீடுகளை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்து கொடுத்து இருக்கிறார்கள்.





“நீங்கள் வாழ்வின் அடுத்தடுத்த கட்டத்திற்கு எல்லோரையும் போல முன்னேறிச் செல்லலாம். உங்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்ய நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது. குறிப்பாக, மகளிருக்கும், மாணவர்களுக்கும் ஏராளமான திட்டங்களை நம் கழக அரசு செய்து வருகிறது.”

உங்களுக்குத் தந்த வாக்குறுதிப்படி பல்வேறு கள ஆய்வுகள், உயர்நிலை ஆய்வுகள், சட்டமன்ற உரைகள் என்று ஆக்கபூர்வமாகச் செயல்பட்டு, இன்றைக்கு உங்களுக்கு நம் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் பெற்றுக் கொடுத்திருக்கிறார். கழக அரசு உங்களுக்குத் தந்த வாக்குறுதியை இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறது.

### சிக்கல் கிடையாது!

“தமிழ்நாட்டில் வசிக்கின்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடுகள் இருக்க வேண்டும். குடிசைகளே இருக்கக்கூடாது” என்றுதான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கினார்கள். நம் முதலமைச்சர் அவர்கள் அதை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக உயர்த்தி, வீடற்ற மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

அந்த வரிசையில், இன்றைக்கு உங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருக்கிறது. இனி, உங்களுக்கான வீட்டில் நீங்கள் நிம்மதியாக இருக்கலாம்.

இவ்வளவு நாட்களாக வீடு இல்லாத காரணத்தால் உங்களுக்கு அரசின் ஆவணங்கள் கிடைப்பதில் சிக்கல்கள் இருந்தன. இனி, அந்தத் தொல்லை கிடையாது. அந்தச் சிக்கல் கிடையாது. ரேஷன் கார்டு, ஆதார் கார்டு, இருப்பிடச் சான்றிதழ் என எல்லாமே உங்களுக்கு, இனிமேல் எளிமையாகக் கிடைக்கும்.

### ஏராளமான திட்டங்கள்!

நீங்கள் வாழ்வின் அடுத்தடுத்த கட்டத்திற்கு எல்லோரையும் போல முன்னேறிச் செல்லலாம். உங்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்ய நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது. குறிப்பாக, மகளிருக்கும், மாணவர்களுக்கும் ஏராளமான திட்டங்களை நம் கழக அரசு செய்து வருகிறது.

‘மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து’ வசதித் திட்டத்தைக் கொடுத்து இருக்கிறது. பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு, காலை உணவு திட்டத்தைக் கொடுத்து இருக்கிறது. உயர்கல்வி சேர்கின்ற மாணவிகளுக்கு, மாணவர்களுக்கு ‘புதுமைப்பெண் திட்டம்’, `தமிழ்ப்புதல்வன் திட்டம்' மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்ய, நான் முதல்வன் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தினால் ஒவ்வொரு வருடமும் 30 லட்சம் இளைஞர்கள் பயன்பெறுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் மூலம் மாதந்தோறும் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டங்களை எல்லாம், எண்ணிப் பார்த்து மகளிர், மாணவர்கள் தன்னம்பிக்கையோடு வாழ்க்கையை எதிர்கொள்ளுங்கள்.

### கல்வியைக் கொடுங்கள்!

இங்கு வந்திருக்கின்ற பெற்றோர்களுக்கு ஒரு கோரிக்கை, உங்களின் பிள்ளைகளுக்கு எதைக் கொடுக்கிறீர்களோ இல்லையோ, தயவுசெய்து கல்வியை முழுமையாக கொடுத்து விடுங்கள். பிள்ளைகளை நீங்கள் பள்ளிகள், கல்லூரிகளுக்கு அனுப்பினால் மட்டும் போதும் மற்ற அனைத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்து, பார்த்து செய்துவிடுவார்.

வீடுகளைப் பெற்றுள்ள நீங்கள் அனைவரும் உங்கள் வீடுகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு எல்லா வகையிலும் நம் கழக அரசு துணை நிற்கும். எனவே, உங்களுக்காக அரசு செயல்படுத்தும் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் இந்தத் திட்டங்களின் பயனாளிகள் மட்டுமல்ல. இந்தத் திட்டங்களின் பங்கேற்பாளர்கள். எனவே, இந்தத் திட்டங்களைப் பற்றி உங்களின் உற்றார் உறவினர்கள், நண்பர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். எங்களுக்கு எப்படி எங்கள் முதலமைச்சர் பிராண்ட் அம்பாசிடரோ, அதேபோல் இந்த அரசுக்கு, பயனாளிகளாகிய நீங்கள்தான் பிராண்ட் அம்பாசிடர்கள்.

புதிய வீடுகளுக்குச் செல்லும் உங்கள் வாழ்வில், புதுமைகள் மலரட்டும் என்று கூறி, உங்கள் அத்தனைப் பேரையும் வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், தாயகம் கவி, துணை மேயர் மகேஷ்குமார், சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் பிரபாகர் ஐ.ஏ.எஸ்., வட்டாரத் துணை ஆணையர் கட்டா ரவி தேஜா ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமலு, மாமன்ற உறுப்பினர் ஸ்ரீராஜேஸ்வரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய மாவட்டச் செயலாளர் செல்வா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவீந்திரன் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.




தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (23.09.2024) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆலந்தூர் மண்டலம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு மற்றும் அரசு துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 22.09.2024 அன்று திருச்சிராப்பள்ளி மகாத்மாகாந்தி நினைவு அரசு மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரூபாய் 5.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 புதிய மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து பல்வேறு துறைகளின் சார்பில் 163 பயனாளிகளுக்கு ரூபாய் 1.48 கோடி மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.செளந்தரபாண்டியன், செ.ஸ்டாலின்குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ர.ராஜலட்சுமி, மாநகர நல அலுவலர் / மாவட்ட சுகாதார அலுவலர்(பொ) மணிவண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி கங்காதாரிணி, மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.